# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## மானியக் கோரிக்கை எண்.37

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

## 2017 – 2018


## பி. தங்கமணி

**மின்சாரம், மதுவிலக்கு மற்றும்**
**ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2017

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 – 2 |
| 2. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை – நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள் | 2 – 3 |
| 3. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் | 3 – 23 |
| 4. | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு | 23 – 31 |
| 5. | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | 31 – 39 |
| 6. | போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு | 39 – 50 |
| 7. | முடிவுரை | 50 |
| 8. | இணைப்புகள் 1 – 5 | 51 – 63 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண். 37

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2017–2018

### முன்னுரை

இந்த அரசின் கொள்கையானது, படிப்படியாக பூரண மதுவிலக்கினை எய்துவதாகும். பூரண மதுவிலக்கை எய்தும் வகையில் இந்த அரசு முதற்படியாக, தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக் கூடங்கள் ஆகியவற்றின் பணி நேரம் குறைக்கப்படும் எனவும் மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் எனவும் ஆணை பிறப்பித்தது. அதன்படி, 24.05.2016 முதல், தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக் கூடங்கள் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை என இயங்கியதற்கு பதிலாக தற்போது நண்பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரையில் இயங்கி

வருகின்றன. மேலும், 500 தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் 19.06.2016 முதல் மூடப்பட்டன. மேலும், 500 சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் 24.02.2017 முதல் மூடப்பட்டன. எனவே, 2016–2017–ஆம் ஆண்டில் 1000 கடைகள் கண்டறியப்பட்டு மூடப்பட்டன.

கள்ள மற்றும் போலி மதுவகைகளை ஒழிப்பதற்கு தீவிர நடவடிக்கைகளை எடுத்ததன் மூலம் இந்த அரசு, சீரிய ஆயத்தீர்வை நிர்வாகத்தினை உறுதி செய்வதிலும் மேலும் வெற்றி கண்டுள்ளது. இச்சீரிய ஆயத்தீர்வை நடவடிக்கைகள் எடுத்ததன் பொருட்டு, 2011 முதல் கள்ளச் சாராய இறப்புகள் ஏதுமில்லை. ஆதலால், இம்மாநிலம் தற்போது கள்ளச் சாராய இறப்புகள் இல்லா மாநிலமாக திகழ்கிறது.

## 2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை நிர்வாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள்

2.1 தமிழ்நாடு அரசின் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் நான்கு அமைப்புகள் செயல்படுகின்றன.

(1) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

(2) மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு

(3) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)

(4) போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு

## 3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

**3.1** 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) மற்றும் அச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளைச் செயல்படுத்தும் அதிகாரி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ஆவார். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் மற்றும் விதிகள் பற்றிய விவரங்கள் **இணைப்பு–1–**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**3.2** மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு உதவியாக, மாநிலத் தலைமையிடத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் இரண்டு இணை ஆணையர்களும், அரசின் இணைச் செயலாளர் (நிதித் துறை) நிலையில் ஒரு நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரும் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் ஐந்து உதவி ஆணையர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

**3.3** மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள், **1937–**ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் வெவ்வேறு அம்சங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு துணை ஆணையரும் (ஆயத்தீர்வை) மற்றும் பிற மாவட்டங்களில் துணை ஆட்சியர் நிலையில் ஒரு உதவி ஆணையரும் (ஆயத்தீர்வை), இவர்களுக்கு உதவியாக வருவாய்த் துறையைச் சார்ந்த வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் நிலையில் உள்ள இதர அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**3.4** துணை ஆட்சியர் நிலையில், வடிப்பாலைகளில் வடிப்பாலை அலுவலர்களும் மற்றும் ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான, பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். **1937–**ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், **1955–**ஆம் ஆண்டின் மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்புச் சட்டம் மற்றும் அவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி, ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருள்களுக்கு ஆயத்தீர்வை

விதித்தல் மற்றும் சாராவி பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக இரசாயன தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகள் ஆகியவற்றில் வருவாய்த் துறையைச் சார்ந்த வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் நிலையிலுள்ள அலுவலர்கள் முறையே ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணைமுறி அலுவலர்களாகவும் (Bonded Manufactory Officers) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு**

**3.5** சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை தயாரிப்பின்போது துணைப் பொருளாக உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சாராவியைத் தயாரிப்பதற்கு ஒரு பொது மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. தற்போது, இம்மாநிலத்தில் 46 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 கூட்டுறவுத் துறையிலும், 3 பொதுத் துறையிலும் மற்றும் 27 தனியார் துறையிலும் உள்ளன. மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் விவரங்கள் **இணைப்பு–2**–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

3.6 1958–ஆம் ஆண்டின் தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின் படி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையர் அவர்கள் மாநிலத்தில் கிடைக்கப்பெறும் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை கருத்தில்கொண்டு தேவைகளுக்கேற்ப ஒதுக்கீடு செய்கிறார். கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல், விற்பனை, பயன்பாடு, போக்குவரத்து, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவற்றிற்கான உரிமம் மற்றும் அனுமதி ஆணைகள் உரிய அதிகாரிகளால் மேற்படி விதிகளின்படி வழங்கப்படுகின்றன.

3.7 1958–ஆம் ஆண்டின் தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின் கீழ், வெளிமாநிலங்களிலிருந்து கருப்பஞ்சாற்றுக் கசண்டு இறக்குமதி செய்ய படிவம் எம்.எல்–2 அல்லது படிவம் எம்.எல்–4–ல் உரிமம் பெற்றவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. கருப்பஞ்சாற்றுக் கசண்டை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய படிவம் எம்.எல்–2–ல் உரிமம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி உரிமம் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமம் வழங்குவதற்கு முன்,

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற வேண்டும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு நிர்வாக சேவைக் கட்டணமாக மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ. 300/–வீதம் வசூலிக்கப்படுகிறது.

**வடிப்பாலைகள் மற்றும் சாராவி**

**3.8** தமிழ்நாட்டில் 18 சாராவி உற்பத்தி செய்யும் வடிப்பாலைகள் உள்ளன. அவற்றில் 16 வடிப்பாலைகள் தனியார் துறையிலும் மற்றும் 2 வடிப்பாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன. மாநிலத்தில் இயங்கி வரும் வடிப்பாலைகளின் விவரங்கள் **இணைப்பு–3**–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**3.9** சாராவி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் தயாரிப்பதற்கு மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது. இச்சாராவி, கல்வி நிறுவனங்கள், இதர ஆய்வுக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் குறைந்த அளவில் பயன்படுத்தப்படுகிறது. வார்னிஷ் (Varnish) மற்றும் வண்ணப் பூச்சுகள் (Paint) உற்பத்தி

செய்யும் தொழிற்சாலைகளில் இயல்பு மாற்றப்பட்ட சாராவி, கரைப்பானாக (solvent) பயன்படுத்தப்படுகிறது.

## தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி (Grain based ENA)

**3.10** தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு உயர்தர மதுபான வகைகள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. தற்போது தமிழகத்தில் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி தயாரிக்கும் வடிப்பாலைகள் எதுவும் இல்லை. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவியினை வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்வதற்கு, அரசின் முன்அனுமதியை பெற்று மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதிக்கப்படுகின்றன.

## எத்தனால் (Ethanol)

**3.11** எத்தனால் என்பது படிமங்களிலிருந்து பெறப்படும் பெட்ரோலிய எரிபொருள்களைப் போல அல்லாமல் தாவரங்களிலிருந்து முதன்மையாக கிடைக்கக்கூடிய

ஒருவகை எரிபொருளாகும். எத்தனால் பசுமை எதிர்விளை வாயுக் கசிவை வெகுவாக குறைத்து, அதன் மூலம் சுற்றுச்சூழலை மாசு இடர்களிலிருந்து பாதுகாக்கிறது. எத்தனால், கச்சா எண்ணெய் இறக்குமதியினைக் குறைத்து அந்நியச் செலாவணியை சேமிப்பதற்கு உதவுகிறது. இத்தகைய நன்மைகளை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள வடிப்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் எத்தனாலை பெட்ரோலுடன் கலந்து எண்ணெய் நிறுவனங்கள் பயன்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசால் கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டு **01.01.2003** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இருப்பினும் **13.12.2006** முதல் எத்தனால் உற்பத்தி நிறுத்தப்பட்டது. அரசு ஆணை (நிலை) எண். 12, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (2) துறை, நாள் **26.03.2012**—ல், மீண்டும் எத்தனால் தயாரிக்க அனுமதிக்கப்பட்டது. ஒவ்வொரு காலாண்டின் அடிப்படையிலும், எத்தனால் உற்பத்தியின் அளவினை மதிப்பீடு செய்வதற்கு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்கள் தலைமையின் கீழ் எத்தனால் உற்பத்தி மதிப்பீட்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது **8** வடிப்பாலைகளுக்கு எத்தனால் உற்பத்தி செய்ய அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் **இணைப்பு–4–**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**3.12** கடந்த சில வருடங்களில் பருவ மழை பொய்த்தல் மற்றும் இதர காரணங்களால் கரும்பு உற்பத்தியின் அளவு வெகுவாகக் குறைந்ததால், கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தியின் அளவும் மிக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், எத்தனால் உற்பத்தி மதிப்பீட்டுக் குழு எத்தனால் உற்பத்தி செய்வதற்கு கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் மாசு சாராவியினை வடிப்பாலைகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், இந்தக் குழு திருவாளர்கள். ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், நெல்லிக்குப்பம் நிறுவனத்திற்கு **16.4643** லட்சம் லிட்டர் மாசுள்ள சாராவியை (கருப்பஞ்சாற்றுக் கசண்டை பயன்படுத்தாமல்) **15.4765** லட்சம் லிட்டர்கள் எத்தனாலாக மாற்றம் செய்து கொள்ள அனுமதித்துள்ளது. எத்தனால் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்ட அளவு மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட அளவு பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:-

| ஆண்டு | காலம் | எத்தனால் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்ட அளவு (இலட்சம் லிட்டரில்) | எத்தனால் உற்பத்தி செய்யப்பட்ட அளவு (இலட்சம் லிட்டரில்) |
|---|---|---|---|
| 2012–2013 | 01.06.2012 முதல் 30.09.2012 வரை | 276 | 44.43 |
| 2013–2014 | 01.03.2013 முதல் 28.02.2014 வரை | 450 | 105.57 |
| 2015–2016 | 11.09.2015 முதல் 31.03.2016 வரை | 50 | 42.778 |
| 2016–2017 | 01.09.2016 முதல் 31.03.2017 வரை | 65.4765 | 01.35 |

**இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்**

**3.13** தமிழ்நாட்டில் பதினொன்று இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்களும், ஏழு பீர் தயாரிக்கும் நிறுவனங்களும் மற்றும் ஒரு ஒயின் தயாரிக்கும் நிறுவனமும் இயங்கி வருகின்றன. இவற்றின் விவரங்கள் **இணைப்பு–5–**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**பீர் ஏற்றுமதி**

**3.14** **2013–**ஆம் ஆண்டில், பீரினை தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், பீரினை வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் நேர்வில் ஆயத்தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், ஏற்றுமதி கட்டணம் மற்றும் ஏற்றுமதி உரிமக் கட்டணம் ஆகியவற்றை மாற்றியமைத்து விதித்திருத்தங்கள் செய்தும் **2015–**ஆம் ஆண்டில் அரசு ஆணையிட்டுள்ளது. வெளிமாநிலங்களுக்கு பீர் ஏற்றுமதி செய்யப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| **ஆண்டு** | **ஏற்றுமதி செய்யப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 2015–2016 | 1,15,000 |
| 2016–2017 | 5,56,490 |
| 2017–2018 ( 31.05.2017 வரை) | 1,27,150 |

**அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி**

**3.15** **1981–**ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின்படி வெளிநாட்டு சுற்றுலா பயணிகள், நட்சத்திர விடுதிகள் மற்றும் மனமகிழ் மன்றங்களின் தேவைகளை கருத்தில் கொண்டு அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்வதற்கு, உரிய சிறப்பு கட்டணம் வசூலிக்கப்பட்ட பின்னர் அனுமதி ஆணைகள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்களால் வழங்கப்படுகிறது. அயல்நாட்டு மதுபான வகைகளின் இறக்குமதியை சீரமைக்க **02.03.2012** முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் வழிப்படுத்தும் முகவராக நியமிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்ய செலுத்தப்படும் சிறப்புக் கட்டணத் தொகையில் **3**% சேவைக் கட்டணமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் வசூலிக்கப்படுகிறது. மேலும், அயல்நாட்டு மதுபான முதற்கட்ட விற்பனை மீது **58**% மதிப்புக் கூட்டு வரியும் விதிக்கப்படுகிறது. **2016–2017–**ஆம் ஆண்டில், சேவைக் கட்டணம் மூலமாக ரூ.**21.55** லட்சம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினால் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்ட சில சில்லறை விற்பனை மதுபானக்

கடைகள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை விற்பனை செய்கிறது.

**3.16** அயல்நாட்டு மதுபானங்கள் மீதான சிறப்புக் கட்டணம் மூலமாக கிடைக்கப்பெற்ற வருவாய் பின்வருமாறு:-

| **வ.எண்** | **நிதியாண்டு** | **சிறப்புக் கட்டணம் (ரூபாய் கோடியில்)** |
|---|---|---|
| 1 | 2010–2011 | 1.86 |
| 2 | 2011–2012 | 1.96 |
| 3 | 2012–2013 | 2.70 |
| 4 | 2013–2014 | 3.30 |
| 5 | 2014–2015 | 7.39 |
| 6 | 2015–2016 | 7.74 |
| 7 | 2016–2017 | 10.80 |

**மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை**

**3.17** மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **2016** டிசம்பர் **15**–ஆம் நாள் மற்றும் **2017** மார்ச் **31**–ஆம் தேதிகளில் தனது ஆணையில் கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டது.

(i) தேசிய / மாநில நெடுஞ்சாலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதற்கு

உரிமங்கள் வழங்கப்படுவதை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

(ii) ஏற்கனவே செயல்பட்டு வரும் உரிமங்கள் இந்த உத்தரவுக்கு முன்னால் புதுப்பிக்கப்பட்டிருப்பின் உரிமகாலம் காலாவதி ஆகும் வரை தொடர்ந்து செயல்படலாம். ஆனால், 01.04.2017–க்குப் பின்னர் செயல்படாது.

(iii) மது விற்பனை தொடர்பான தேசிய / மாநில நெடுஞ்சாலைகளில் குறியீடுகள் மற்றும் விளம்பரப் பலகைகள் வைப்பதை தடை செய்வதுடன் ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள குறியீடுகள் மற்றும் விளம்பரப் பலகைகளை உடனடியாக அகற்ற வேண்டும்.

(iv) 20,000 மற்றும் அதற்கும் குறைவாக மக்கள் தொகை கொண்ட உள்ளாட்சி பகுதிகளில் தேசிய / மாநில நெடுஞ்சாலை / நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகுபாதையிலிருந்து 220 மீட்டர் தூரத்திற்குள் மதுபானங்கள் விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்கக்கூடாது.

(V) **20,000** க்கும் அதிகமாக மக்கள் தொகை கொண்ட உள்ளாட்சி பகுதிகளில் தேசிய / மாநில நெடுஞ்சாலை / நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகுபாதையிலிருந்து **500** மீட்டர் தூரத்திற்குள் மதுபானங்கள் விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்கக்கூடாது.

**3.18** மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் மேற்படி உத்திரவுகளை உடனடியாக செயல்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மதுபானங்கள் விற்பனை தொடர்பாக தேசிய/ மாநில நெடுஞ்சாலைகளில் வைக்கப்பட்டிருந்த விளம்பரங்கள் /குறியீடுகள் அனைத்தும் அகற்றப்பட்டன. மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவின்படி டாஸ்மாக் தனது **3321** மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை **01.04.2017** அன்று மூடியது. கடைகளை இடமாற்றம் செய்யும்பொழுது, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் **2003**–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளின், விதி எண்.**8(1)**–ல் கூறப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி (norms) கடைகளின் புதிய அமைவிடம் அமைந்துள்ளதா என்று உறுதி செய்யப்படுகிறது. பொதுமக்கள் எழுப்பும் நியாயமான ஆட்சேபணைகளும், கடைகளை இடமாற்றம் செய்வது குறித்து

முடிவெடுப்பதற்கு முன்பு, கவனத்தில் கொள்ளப்படுகிறது. மேலும், தேசிய / மாநில நெடுஞ்சாலைகள் / நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகுபாதையிலிருந்து 500 மீட்டர் / 220 மீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ள எப்.எல்.2/ எப்.எல்.3 / எப்.எல்.3 ஏ / எப்.எல்.3ஏஏ உரிம இடங்களில் செயல்பட்டு வந்த மதுபானக் கூடங்கள் அனைத்தும் 01.04.2017 முதல் மூடப்பட்டன.

3.19 மொத்தம் 124 எப்.எல்.2 உரிமங்களும், 512 எப்.எல்.3 உரிமங்களும், 12 எப்.எல்.3.ஏ உரிமங்களும், 6 எப்.எல்.3.ஏஏ உரிமங்களும் 01.04.2017 முதல் மூடப்பட்டுள்ளன. மேலும் தேசிய / மாநில நெடுஞ்சாலைகள் / நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகுபாதையிலிருந்து 500 / 220 மீட்டர் தூரத்தில் மதுபானங்கள் விற்பனை செய்வதற்கு எந்தவிதமான புதிய உரிமங்களும் வழங்கப்படவில்லை.

**மாநில ஆய வில்லைகள்**

3.20 கள்ள மற்றும் போலி மதுபானங்களின் நடமாட்டம் மற்றும் விற்பனையைத் தடுக்கும் பொருட்டு, 2003–ஆம் ஆண்டு முதல் அதிக பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய, செயற்கை இழை ஆயவில்லைகளை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மூலம் விற்பனை செய்யப்படும் இந்தியத்

தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள், பீர் மற்றும் ஒயின் பாட்டில்கள் மீது ஒட்டி விற்பனை செய்யப்படும் நடைமுறையானது, அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வில்லைகளின் பாதுகாப்பு அம்சங்களும் அவ்வப்போது தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. தற்போது மாதமொன்றுக்கு சராசரியாக **25.02** கோடி ஆயவில்லைகள் தேவைப்படுகின்றன. **2016–2017**–ஆம் ஆண்டில் ஆயவில்லைகளின் விற்பனை மூலம் அரசு ஈட்டியுள்ள வருவாய் ரூ.**22.02** கோடியாகும்.

**மனந்திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி**

**3.21** கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்ட மதுவிலக்குக் குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக, **2003–2004**–ஆம் ஆண்டில் முதன் முதலாக அரசு கடனாக நிதி உதவி வழங்கியது.

**3.22** **2011–2012**–ஆம் ஆண்டில் கடனாக வழங்கப்பட்டு வந்த மறுவாழ்வு நிதி ரூ.**2.20** கோடியிலிருந்து ரூ.**5.00** கோடியாக உயர்த்தப்பட்டதோடு மானியமாகவும் மாற்றப்பட்டது. இதேபோன்று, அடுத்தடுத்த ஆண்டுகளில்

ஒவ்வொரு ஆண்டும், **ரூ.5.00** கோடி மறுவாழ்வு நிதி மானியமாக வழங்கப்பட்டது.

**3.23** ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் மற்றும் துணை / உதவி ஆணையர் (ஆயத்தீர்வை) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட மறுவாழ்வு குழு மதுவிலக்கு குற்றவாளிகளின் பொருளாதார மறுவாழ்விற்காக வழங்கப்படும் மானியத் தொகையை அளிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ளது.

**3.24** இக்குழு மதுவிலக்கு குற்றங்களுக்கு தண்டனை பெற்று, மனந்திருந்தி, பொருளாதார நிலையில் நலிவுற்று இருப்பவர்களின் மறுவாழ்விற்கென பயன்பெறுவோர் பட்டியலை தெரிவு செய்யும். இந்த பயனாளிகளுக்கு கறவை மாடுகள், ஆடுகள் வளர்த்தல், ஊதுவத்தி, கற்பூரம், உடனடி சாம்பிராணி, மெழுகுவர்த்தி, காகிதக்குவளை, துணி சோப்பு, துணி சோப்புப் பொடி முதலியவைகளை தயாரித்தல் மற்றும் சிறு வியாபாரங்களை

மேற்கொள்ள அதிகபட்சமாக நபர் ஒன்றுக்கு ரூ.30,000/–க்கு மிகாமல் மானியமாக நிதியுதவி வழங்கப்படுகிறது.

3.25 2016–2017–ஆம் ஆண்டிலும் அரசாணை (நிலை) எண்.17, உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (7) துறை, நாள் 17.10.2016–ன் படி, இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத் தண்டனை பெற்றவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காக ரூ.5.00 கோடி அரசால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

3.26 கடந்த 10 ஆண்டுகளில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட கடனுதவி/மானியம் மற்றும் பயனாளிகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2007–2008 | 250.00 | 2004 |
| 2008–2009 | 250.00 | 1651 |
| 2009–2010 | 220.00 | 1569 |
| 2010–2011 | 220.00 | 1524 |
| 2011–2012 | 500.00 (மானியம்) | 1898 |
| 2012–2013 | 500.00 (மானியம்) | 1900 |
| 2013–2014 | 500.00 (மானியம்) | 1780 |
| 2014–2015 | 500.00 (மானியம்) | 1643 |
| 2015–2016 | 500.00 (மானியம்) | 1666 |
| 2016–2017 | 500.00 (மானியம்) | 1650 |

**கள்ளச்சாராயத்தினால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து விழிப்புணர்வு**

**3.27** சாராயம் அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே மாநிலம் தழுவிய விழிப்புணர்வு ஏற்படுத்த, முதன் முதலில் **2003–2004–**ஆம் ஆண்டில் ரூ.**10.00** இலட்சமும், அதன்பின்பு **2004–2005–**ஆம் ஆண்டில் ரூ.**30.00** இலட்சமும் அரசால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. ஏழு ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் **2011–2012** முதல் **2014–2015** வரையிலான ஆண்டுகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த

அரசால் ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது.

3.28 2015–2016–ஆம் ஆண்டில், குடிப்பழக்கம் மற்றும் கள்ளச் சாராயத்திற்கு எதிரான விழிப்புணர்வு முகாம்கள் நடத்த ஒதுக்கப்பட்ட நிதியானது, ரூ.1.00 கோடியிலிருந்து,ரூ. 3.00 கோடியாக அரசால் உயர்த்தப்பட்டது.

2016–2017–ஆம் ஆண்டில், அரசாணை (நிலை) எண்.15, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (7) துறை, நாள் 29.09.2016–ன் படி விழிப்புணர்வு முகாம்கள் நடத்த தமிழ்நாடு மாநில வாணிபக் கழக நிதியிலிருந்து ரூ.3.00 கோடி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையருக்கு வழங்க அரசால் ஆணையிடப்பட்டது.

3.29 அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும், தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் விழிப்புணர்வு பேரணி, முகாம்கள், கருத்தரங்குகள், தெரு நாடகங்கள், சிறு நகைச்சுவை நாடகங்கள், பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பொது இடங்களில் விளம்பரம் மற்றும் துண்டு பிரசுரம் விநியோகித்தல், மனித சங்கிலி போன்றவைகள் மாணவ மாணவிகள், சுய உதவி குழுக்கள் மற்றும் அரசு சாரா

அமைப்புகள் மூலமாகவும் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்தின் தனித்துவமான சமூக, பொருளாதார, புவியியல் காரணிகளுக்கு ஏற்றவாறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

## 4. மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு

**4.1** கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தலை ஒழிப்பதற்காகவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் வெளி மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதை தடுப்பதற்காகவும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

**4.2** காவல்துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) இப்பிரிவின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக ஒரு காவல் துறை தலைவர், சென்னையில் மத்திய புலனாய்வுப் பிரிவில் காவல் கண்காணிப்பாளர் ஒருவரும், சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் தலா ஒரு காவல் கண்காணிப்பாளரும் (அமலாக்கம்) பணியாற்றுகின்றனர். மத்திய புலனாய்வுப் பிரிவில் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக 2 காவல் துணை கண்காணிப்பாளர்களும்,

6 காவல் ஆய்வாளர்களும், 8 உதவி ஆய்வாளர்களும், ஒரு தலைமைக் காவலரும் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலரும் பணிபுரிந்து வருகின்றனர்.

4.3 மாநிலத்தில் தொண்ணூற்று ஆறு அமலாக்க அலகுகள் இயங்குகின்றன. காவல் ஆய்வாளர்களின் தலைமையில் இயங்கும் இந்தப் பிரிவுகள் அனைத்தும் 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவட்டம் / நகரங்களில் உள்ள துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகரங்களில் காவல் ஆணையர்களின் நிர்வாக மற்றும் செயல்பாட்டு கட்டுப்பாட்டின்கீழ் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் மற்றும் அதனைச் சார்ந்த அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

**சோதனைச் சாவடிகள்**

4.4 வெளி மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத/போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு

மதுபானம், தெளிந்த சாராவி மற்றும் சாராய உறைகள், ஆகியவை தமிழ்நாட்டுக்குள் கள்ளத்தனமாக கடத்தப்படுவதை கண்காணித்து தடுக்க 45 மதுவிலக்குச் சோதனைச் சாவடிகள் மற்றும் 7 நடமாடும் சோதனைச் சாவடிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

**அ) சோதனைச் சாவடிகள்**

| வரிசை எண் | மாவட்டம் | சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் | 5 |
| 2 | கன்னியாகுமரி | 1 |
| 3 | தேனி | 1 |
| 4 | திருவள்ளூர் | 5 |
| 5 | வேலூர் | 5 |
| 6 | கடலூர் | 4 |
| 7 | விழுப்புரம் | 9 |
| 8 | கிருஷ்ணகிரி | 7 |
| 9 | ஈரோடு | 1 |
| 10 | சேலம் | 2 |
| 11 | நீலகிரி | 1 |
| 12 | திருவாரூர் | 1 |
| 13 | திருப்பூர் | 1 |
| 14 | கோயம்புத்தூர் | 1 |
| 15 | சென்னை மாநகரம் | 1 |
| | **மொத்தம்** | **45** |

**ஆ) நடமாடும் சோதனைச் சாவடிகள்**

| வரிசை எண் | மாவட்டம் | நடமாடும் சோதனைச் சாவடிகள் |
|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் | 2 |
| 2 | கடலூர் | 1 |
| 3 | விழுப்புரம் | 1 |
| 4 | கிருஷ்ணகிரி | 1 |
| 5 | திருவள்ளூர் | 1 |
| 6 | திருவாரூர் | 1 |
| | **மொத்தம்** | **7** |

**திடீர் வாகனச் சோதனை**

**4.5** தெளிந்த சாராவியானது கடத்தப்பட்டு, போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மதுபானமாக மலிவு விலையில் விற்கப்படுகிறது. இது, கள்ளச் சாராய இறப்புகளை ஏற்படுத்துகிறது. மாநிலம் முழுவதும் மத்திய புலனாய்வுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளின் மூலம் சேகரிக்கப்படும் நுண்ணறிவு தகவல்களின் அடிப்படையில் திடீர் வாகன சோதனைகள், முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன. **2016–2017–**ஆம் ஆண்டில் **(31.05.2017** வரை**)** இத்திடீர் வாகன சோதனைகளின் மூலம் **395** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு **108** வாகனங்கள்

(1 லாரி, 6 டிரக்குகள், 10 ஈப்புகள், 25 கார்கள், 3 ஆட்டோக்கள் மற்றும் 63 இருசக்கர வாகனங்கள்) கைப்பற்றப்பட்டுள்ளன.

**காந்தியடிகள் காவலர் பதக்கம்**

**4.6** குடியரசு தினத்தன்று, கள்ளச் சாராய ஒழிப்புப் பணியில் சிறப்பாகப் பணிபுரிந்த காவல்துறை பணியாளர்களுக்கு, காந்தியடிகள் காவலர் பதக்கமும், ரூ.20,000/– பரிசுத் தொகையும் வழங்கப்படுகிறது. 2017–ஆம் ஆண்டு, ஜனவரி 26–ஆம் நாள் குடியரசு தினத்தன்று, 2016–ஆம் ஆண்டிற்கான பதக்கமானது, ஐந்து காவல்துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.09, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (7) துறை, நாள் 27.03.2017–ல், இவ்வெகுமதியாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.20,000/– லிருந்து ரூ.40,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதிகள்**

**4.7** தெளிந்த சாராவி கடத்துதல் பற்றி தங்கள் உயிரை பணயம் வைத்து மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலுவலர்களுக்கு தகவல்கள் தரும் தகவலாளர்களுக்கு வெகுமதி வழங்குவதற்காக, 2015–2016–ஆம் ஆண்டில்

தமிழ் நாடு மாநில வாணிபக் கழகத்தின் நிதியிலிருந்து ரூ.15 இலட்சத்தை ஒப்பளிப்பு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி 97 தகவலாளர்களுக்கு ரூ.13,49,000/– பகிர்ந்து வழங்கப்பட்டது.

**மதுவிலக்கு உதவி தொலைபேசி எண். 10581**

**4.8** கட்டணமில்லா மதுவிலக்கு உதவி தொலைபேசி எண்.**10581** ஏற்படுத்த அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அது மதுவிலக்கு தலைமையக மத்திய புலனாய்வுப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் நிறுவப்பட்டு **24.07.2013** முதல் செயல்பட்டு வருகிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், தெளிந்த சாராவி கடத்துதல், போலி மதுபானம், கள்ளச்சாராயம் விற்பனை செய்தல் ஆகிய மதுவிலக்கு குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் தகவலாளர்கள் இலவசமாக தகவல் அளிப்பதற்கு ஏதுவாக இருப்பது இந்த உதவி தொலைபேசி எண் ஏற்படுத்தியதின் நோக்கமாகும். **2016–2017–**ஆம் ஆண்டில் **(31.05.2017** வரையில்**)** உதவி தொலைபேசி எண்ணில், மொத்தம் **4098** புகார்கள் பெறப்பட்டு, அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்**

4.9 2016–2017–ஆம் ஆண்டில் (31.05.2017 வரையில்) ரூ.2.92 கோடி மதிப்புள்ள 7.30 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயம், ரூ.99.88 இலட்சம் மதிப்புள்ள 99,884 லிட்டர் தெளிந்த சாராவி, ரூ. 17.62 கோடி மதிப்புள்ள பிற மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்பட்ட 17.62 இலட்சம் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான பாட்டில்கள் மற்றும் ரூ.78.17 இலட்சம் மதிப்புள்ள மற்ற மதுபான வகைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. மதுவிலக்கு குற்றங்களில் பயன்படுத்தப்பட்ட 3658 மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. திருவள்ளூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் சட்டத்திற்குப் புறம்பாக இயங்கி வந்த தலா ஒரு போலி மதுபான உற்பத்திக் கூடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன.

**கள்ளச்சாராய இறப்பு சம்பவங்களைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்**

4.10 கள்ளச்சாராயத்தில் முக்கியமாக “மெத்தனால்” என்ற இரசாயனப் பொருளின் பயன்பாட்டால் உயிரிழப்புகள் நிகழ்ந்தன. ஆதலால் “மெத்தனால்” எளிதாகக் கிடைப்பதைத் தடுக்கும் பொருட்டு, அதனை 2002–ஆம் ஆண்டு முதல்

1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் வரம்புக்குள் அரசு கொண்டு வந்தது. மேலும், மெத்தனால் வைத்திருத்தல், பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் போன்றவற்றை தீவிரமாக கட்டுப்படுத்திடவும், 2002–ஆம் ஆண்டில், 1959–ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன.

மெத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகள், அப்பொருளை பயன்படுத்த மற்றும் வைத்திருக்க உரிமம் பெற்ற பிரிவுகள் முதலியவற்றைச் சோதனையிட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கை மதுவிலக்கு அமலாக்க தலைமையிடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

***4.11 இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால், இம்மாநிலத்தில் 2011 முதல் கள்ளச்சாராய இறப்புகள் ஏதுமில்லை.***

**தடுப்புக்காவல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982)**

**4.12** மாநிலத்தில் பொது ஒழுங்கு சீர்குலைவதற்கு மூலகாரணம் கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்,

வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப்பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் போன்றவர்களின் அபாயகரமான நடவடிக்கைகள் ஆகும். இந்தக் குற்றவாளிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வழிவகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு சட்டம் **14/1982, 1982–ஆம்** ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, மேற்கூறிய குற்றவாளிகள் ஓராண்டு வரை தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர்.

**2016–2017–ஆம்** ஆண்டில் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் **14/1982**), **312** தொடர் மதுவிலக்கு குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## 5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

**5.1** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) **23.05.1983** அன்று **1956–ஆம்** ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் சாராயத்தை தமிழ்நாட்டில் மொத்த

விற்பனை விநியோகம் செய்யும் உரிமையை தனியாரிடமிருந்து கையகப்படுத்தியது.

**5.2** **1937–**ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) பிரிவு **17–**C **(1–**A) **(**a)**–**ன் படி தமிழ்நாடு முழுவதும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் அயல்நாட்டு மதுவகைகளை மொத்தவிற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் மதுபான மொத்த விநியோகத்தை இந்நிறுவனம் **23.05.1983** முதல் செய்து வருகிறது. மேலும் **1937–**ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவு **17–**C (1-B) (a)**–**ன்படி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளை சில்லறை விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் டாஸ்மாக் நிறுவனம் **29.11.2003** முதல் மதுபான சில்லறை விற்பனையை ஏற்று நடத்தி வருகிறது. மேலும், இந்நிறுவனம் இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மது, பீர் மற்றும் ஒயின் வகைகளையும் விற்பனை செய்து வருகிறது.

**இயக்குநர் குழுமம்**

**5.3** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இயக்குநர் குழுமம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை இயக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை) அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

**5.4** இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.15.00 கோடி ஆகும். மொத்த பங்கு மூலதனமான ரூ.15.00 கோடியும் அரசால் வழங்கப்பட்டுள்ளது .

**பதிவு அலுவலகம்**

**5.5** தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக முதன்மை பொது மேலாளர் (நிதி)

மற்றும் நிறுவனச் செயலர், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்தவிற்பனை மற்றும் நிர்வாகம்), பொது மேலாளர் (சில்லறை விற்பனை) மற்றும் தொழிலாளர் துணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்) மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

**மண்டல அலுவலகங்கள், மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்**

**5.6** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையில் **5** மண்டல அலுவலகங்கள் உள்ளன. இவ்வலுவலகங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

**5.7** **31.05.2017**–ல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு **38** மாவட்ட மேலாளர் அலுவலகங்களும், **43** இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும், **2,830** மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் மற்றும் **897** சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்களும் உள்ளன. இந்த **43** மதுபானக்

கிடங்குகளில் 30 மதுபானக் கிடங்குகள் இந்நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்குகின்றன.

**சில்லறை விற்பனை பணியாளர்கள்**

**5.8** **31.05.2017–ல்** சில்லறை விற்பனைக் கடைகளில் ஒப்பந்த/ தொகுப்பூதிய அடிப்படையில் **7,203** கடை மேற்பார்வையாளர்களும், **15,744** விற்பனையாளர்களும் மற்றும் **3,732** உதவி விற்பனையாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும், செப்டம்பர் மாதத்தில், இப்பணியாளர்களுக்கான தொகுப்பூதியமானது உயர்த்தி வழங்கப்படுகிறது.

**சில்லறை விற்பனைப் பணியாளர் நலத்திட்டங்கள்**

**5.9** சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியத்துடன் ஒவ்வொரு ஆண்டும் **20** சதவீதம் போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணியாளர்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர் வருங்கால வைப்புநிதித்திட்டம் (EPF Scheme), தொழிலாளர் வைப்புநிதியுடன் இணைந்த

காப்புறுதித் திட்டம் (EDLI Scheme), பணிக்கொடை (GRATUITY), குடும்ப சேம நலநிதித் திட்டம் (Family Benefit Fund Scheme), ஆண்டு கூடுதல் ஊக்கத் தொகை (Annual Additional Fixed Incentive) ஆகிய திட்டங்கள் சில்லறை விற்பனைப் பணியாளர்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மூடப்பட்ட சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிந்த பணியாளர்களை மீளப்பணியமர்த்தல்**

**5.10** **19.06.2016** மற்றும் **24.02.2017** அன்று மூடப்பட்ட **1000** சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிந்த பணியாளர்கள் மற்றும் மாண்பமை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி மூடப்பட்ட கடைகளில் பணிபுரிந்த பணியாளர்கள், இந்நிறுவனத்தில் தகுந்த பணியிடங்களில் மீளப் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். மேலும், எந்தப் பணியாளருக்கும் பணியிழப்பு ஏற்படவில்லை.

**மதுபான வகைகள் கொள்முதல்**

**5.11** தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநிலத்தில் இயங்கி வருகின்ற **11** இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், **7** பீர்

தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் ஒரு ஒயின் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது, பீர் மற்றும் ஒயின் வகைகளை கொள்முதல் செய்து வருகிறது.

**மின்னணு பற்றுச்சீட்டு இயந்திரங்கள்**

**5.12** மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் பற்றுச்சீட்டுகளை கையினால் எழுதும்போது ஏற்படும் தாமதம் மற்றும் தவறுகளைத் தவிர்க்கவும் மற்றும் சில்லறை விற்பனைக் கணக்குகள் மற்றும் சரக்கு இருப்பு விவரங்களைச் சுலபமாகப் பராமரிப்பதற்காகவும், சில மாவட்டங்களில் மின்னணு பற்றுச்சீட்டு இயந்திரங்கள் நிறுவப்பட்டன. இந்த இயந்திரங்கள் சென்னை (வடக்கு), சென்னை (மத்தியம்), சென்னை (தெற்கு), காஞ்சிபுரம் (வடக்கு), காஞ்சிபுரம் (தெற்கு), திருவள்ளூர் (கிழக்கு), திருவள்ளூர் (மேற்கு), திருச்சி, கோயம்புத்தூர் (வடக்கு), கோயம்புத்தூர் (தெற்கு), மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு), ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைந்துள்ள மதுபானக் கடைகளில் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள மாவட்டங்களிலும் மின்னணு பற்றுச்சீட்டு இயந்திரங்கள் நிறுவப்படும்.

**மதுவிற்பனை இல்லாத நாட்கள்**

**5.13** மது விற்பனை இல்லாத நாட்கள் **5–**லிருந்து **8–** ஆக **03.01.2012** முதல் உயர்த்தப்பட்டு உள்ளன. அவை காந்தி ஜெயந்தி தினம், திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி தினம், நபிகள் நாயகம் பிறந்த நாள், வடலூர் இராமலிங்கர் நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகியவை ஆகும். இது தவிர, முக்கிய நிகழ்வுகளின் நாட்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்புடைய நாட்கள் ஆகியவையும் மது விற்பனையில்லாத நாட்களாக அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

**அரசு வருவாய்**

**5.14** அரசின் வருவாய் பற்றிய விவரம் பின் வருமாறு:-

| **வ. எண்** | **ஆண்டு** | **ஆயத்தீர்வை வருவாய்** | **மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி)** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| | | **(ரூபாய் கோடியில்)** | | |
| 1 | 2003–04 | 1657.10 | 1982.83 | 3639.93 |
| 2 | 2004–05 | 2549.00 | 2323.03 | 4872.03 |
| 3 | 2005–06 | 3176.65 | 2854.12 | 6030.77 |
| 4 | 2006–07 | 3986.41 | 3487.20 | 7473.61 |

| வ. எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 5 | 2007–08 | 4764.05 | 4057.11 | 8821.16 |
| 6 | 2008–09 | 5755.42 | 4846.08 | 10601.50 |
| 7 | 2009–10 | 6740.59 | 5757.63 | 12498.22 |
| 8 | 2010–11 | 8115.90 | 6849.52 | 14965.42 |
| 9 | 2011–12 | 9956.06 | 8125.10 | 18081.16 |
| 10 | 2012–13 | 12125.31 | 9555.36 | 21680.67 |
| 11 | 2013–14(*) | 5034.82 | 16640.07 | 21674.89 |
| 12 | 2014–15(*) | 5731.18 | 18433.77 | 24164.95 |
| 13 | 2015–16(*) | 5836.01 | 20009.57 | 25845.58 |
| 14 | 2016–17(*) | 6248.17 | 20747.08 | 26995.25 |

(*) ஆயத்தீர்வை வருவாய் குறைவாகவும், மதிப்புக் கூட்டு வரி(விற்பனை வரி) அதிகமாகவும் இருப்பது வரி விதிப்பு முறைகளில் செய்யப்பட்ட சில மாற்றங்களினால் ஆகும்.

## 6. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

**6.1** போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது (குற்றப் புலனாய்வு துறை) சென்னையில் **17.12.1963** அன்று ஏற்படுத்தப்பட்டது. **1987, 1990, 1994, 1995** மற்றும் **2004–**ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசு ஆணைகளின்படி

திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திண்டுக்கல், தேனி, விழுப்புரம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், தூத்துக்குடி, வேலூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது மொத்தம் 15 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வருகின்றன. போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைத் தயாரித்தல், பயன்படுத்துதல், கடத்துதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய நுண்ணறிவு தகவல்களைச் சேகரித்தல் மற்றும் இந்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வது ஆகியவை இப்பிரிவின் முக்கிய பணிகள் ஆகும்.

**நிர்வாக அமைப்பு**

**6.2** உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கீழ் இயங்கும் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது காவல்துறை கூடுதல் இயக்குநர் (குற்றம்) அவர்களின் தலைமையிலும், காவல்துறை தலைவர் (குற்றம்) (Anti Narcotics Task Force) அவர்களின் மேற்பார்வையில், ஒரு காவல் கண்காணிப்பாளர் தலைமையில், ஒரு கூடுதல்

காவல் கண்காணிப்பாளர், **12** காவல் துணை கண்காணிப்பாளர்கள், **16** காவல் ஆய்வாளர்கள், **17** காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் **126** காவலர்கள் ஆகியோரைக் கொண்டு மாநில போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு இயங்கி வருகிறது.

**மத்திய போதைப் பொருள் பிரிவுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்**

**6.3** **1985–**ஆம் ஆண்டில் போதை பொருள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள போதைப் பொருள் தடுப்புப் பிரிவுடன் இணைந்து பணியாற்றுகிறது. மத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவானது, மாநில போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாட்டை மேம்படுத்தும் வகையில், இப்பிரிவைச் சார்ந்த அதிகாரிகளுக்குப் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் குறித்த சிறப்பு பயிற்சிகள் அளிக்கிறது.

## 6.4 1985–ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள தண்டனை விவரங்கள்

- 1 கிலோ வரை கஞ்சா அல்லது 5 கிராம் வரை ஹெராயின் (குறைந்த அளவு) வைத்திருந்தால் ஒரு ஆண்டு வரை சிறைத்தண்டனை அல்லது ரூ.10,000/– அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

- 1 கிலோவிற்கு மேல் 20 கிலோ வரை கஞ்சா அல்லது 6 முதல் 250 கிராம் வரை ஹெராயின் (நடுத்தர அளவு) வைத்திருந்தால் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் ரூ.1 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

- 20 கிலோவிற்கு மேல் கஞ்சா அல்லது 250 கிராமிற்கு மேல் ஹெராயின் (வணிக அளவு) வைத்திருந்தால் 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் ரூ.1 லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

- இத்தகைய குற்றச் செயல்களில் மீண்டும் மீண்டும் ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்ச சிறைத் தண்டனையின் ஒன்றரை மடங்குவரை நீட்டிக்கத்தக்க கடுங்காவல் சிறை தண்டனையுடன் மற்றும் அதிகபட்ச அபராத தொகையில் ஒன்றரை மடங்கு வரை நீட்டிக்கத்தக்க அபராதமும் விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார்.

- யாதொருவர் இந்த சட்டத்தின் கீழ் மீண்டும் மீண்டும் தண்டிக்கத்தக்க குற்றங்கள் எதையும் செய்திருந்தாலோ அல்லது செய்ய முயன்றாலோ அல்லது குற்றமுறு சதி அல்லது அதற்கு உடந்தையாக இருந்திருந்தாலோ மற்றும் இச்சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக போதை மருந்துகளை வணிக அளவிற்கு வைத்திருந்தாலோ மற்றும் மேற்படி சட்ட விரோத செயல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிதியுதவி செய்திருந்தாலோ, அவர் மரண தண்டனை விதித்து தண்டிக்கப் படத்தக்கவராவார்.

**1988–ஆம் ஆண்டின் சட்டவிரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (PIT NDPS Act-1988)**

**6.5** **1988–**ஆம் ஆண்டின் சட்டவிரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் **46/1988)** மத்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம், **1988–**ஆம் ஆண்டு ஜுலை **1–**ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ், போதை மருந்துகள் மற்றும் மனமயக்க பொருட்களை கள்ளத்தனமாக கடத்தும் நபர்களை காவலில் வைக்க, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் ஒரு ஆண்டும் அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளும் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளை தடுப்புக் காவலில் வைக்கலாம்.

**போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் பயன்பாட்டை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

**6.6** **2016–2017**ஆம் ஆண்டில் (ஏப்ரல் **2016** முதல் மே **2017** வரை), போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு **2,153** வழக்குகளைக் கண்டுபிடித்து **2,249** குற்றவாளிகளை கைது செய்துள்ளது. அவர்களிடமிருந்து **6,410** கிலோ உலர் கஞ்சா,

2 கிலோ கெட்டமின், 2.125 கிலோ மெத்தகுலோன், 2.017 கிலோ கிராம் மெத்தாம்பிடாமின், 2.500 கிலோ கஞ்சா சாக்லேட் மற்றும் 34 போதை மாத்திரைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.14.55 கோடி ஆகும்.

2016–2017–ஆம் ஆண்டில் (31.05.2017 வரையில்) 35 போதைப் பொருள் குற்றவாளிகள், குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

போதைப் பொருள் மற்றும் மனமயக்கச் சட்டம் 1985–ஐ சிறப்பாகச் செயல்படுத்த சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

போதைப் பொருள் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட புதிய குற்றவாளிகள் மீது குற்றப் பதிவேடுகள் (History Sheets) துவங்கப்பட்டு கண்காணிக்கப் படுகின்றன.

வனப்பகுதிகளில் கஞ்சா பயிரிடப்படுவதைத் தடுக்க வனத்துறையினருடன் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

பதிவேடுகளை சிறந்த முறையில் பராமரிக்க மற்றும் சிறப்பான மேற்பார்வைக்கு ஒழுங்கான முறையில் பயன்படுத்த

குற்றப்பிரிவில், ஒரு குற்ற ஆவணப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

வணிக அளவு உள்ள வழக்குகளின் சீரிய மேற்பார்வைக்கு ஒரு கொடுங்குற்ற ஆவணப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

**சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு நாள்**

**6.7** பொதுமக்கள் மத்தியில், போதைப் பொருட்கள் பயன்படுத்துதலைத் தடுக்கவும், போதை மற்றும் மனமயக்கப் பொருட்களைக் கடத்துவதைத் தடுக்கவும் போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு/கடத்தல் தடுப்பு நாள் **26.06.2016** அன்று தமிழ் நாட்டில் தகுந்த முறையில் அனுசரிக்கப்பட்டது. அனைத்து போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு அலகுகள் உள்ள இடங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், மாணவர்கள், கல்வி நிறுவனங்கள், போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு அலுவலர்கள், கடலோரக் காவல்படை, இந்திய செஞ்சிலுவை சங்கம் மற்றும் தன்னார்வ தொண்டு

நிறுவனங்கள் ஆகியோரால் இந்நாளில், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சென்னையில், இந்நாளில் மாணவ மாணவியர் தொழில் நுட்ப நிறுவனங்கள் மற்றும் இந்திய செஞ்சிலுவை சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்ட மனிதச்சங்கிலி நடத்தப்பட்டது.

## 6.8 2017–2018–ஆம் ஆண்டிற்கான நடவடிக்கை விவரங்கள்

1. போதைப் போருள் தடுப்பு சட்ட அமலாக்கம் குறித்து, போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவினருக்கு பயிற்சி அளித்தல்.

2. அண்டை மாநிலங்களிலிருந்து வரும் அதிகப்படியான போதைப் பொருட்களை தடுக்க தீவிர சோதனைகள் மேற்கொள்ளுதல்.

3. மலைப் பிரதேசங்களில் கஞ்சா செடி வளர்ப்பைத் தடுக்க தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளுதல்.

4. தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடுவதைத் தடுக்க வனத்துறையினருடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

5. போதைப் பொருள் கடத்தும் குற்றவாளிகள் மீது தடுப்புக்காவல் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

6. மனுக்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணுதல்.

7. குற்றப்பிரிவில் உள்ள குற்ற ஆவண காப்பகத்தின் மூலம் தகவல்கள் சேகரித்து தகவல்களை ஒப்பிட்டு போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்துதல்.

8. வழக்கமான போதைப் பொருள் குற்றவாளிகளைக் கண்டறிந்து கண்காணித்தல்.

9. போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு அலகுகளை சிறப்பாக மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

10. கொடுங்குற்ற வழக்குகளை கலந்தாய்வு கூட்டத்தில் ஆய்வு செய்து நமூனாக்கள் மூலம் அறிவுறுத்துதல்.

11. விசாரணையில் உள்ள வழக்குகள் மற்றும் வெவ்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்க சிறப்பாக மேற்பார்வையிடுதல்.

12. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினர் மூலம் பொது இடங்களில் குறிப்பாக கல்வி நிறுவனங்கள் அருகில் சோதனை செய்து கல்வி நிறுவனங்களின் அருகில் போதைப் பொருள் விற்பனையைத் தடுத்தல்.

13. தனியார் கூரியர் நிறுவனங்களைப் பற்றிய நுண்ணறிவை சேகரித்து சட்டப்படி நடவடிக்கைக்கு உட்படுத்துதல்.

14. 1985–ஆம் ஆண்டின் போதைப் பொருள் மற்றும் மனமயக்கப் பொருள்கள் சட்டத்தின்படி பிற

போதைப் பொருள் தடுப்பு பிரிவுகளுடன் இணைந்து சோதனைகள் மேற்கொள்ளுதல்.

15. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, காவல் துறையினர் மருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள மருந்து கடைகளை சோதனை செய்தல்.

## 7. முடிவுரை

அரசு, கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ள மற்றும் போலி மதுவகைகளின் விற்பனை மற்றும் கடத்தல், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் விற்பனை ஆகியவற்றைத் தடுப்பதற்கு உறுதியான மற்றும் கடுமையான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும். அரசு பூரண மதுவிலக்கினை மாநிலத்தில் படிப்படியாக கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளும்.

**பி. தங்கமணி**
**மின்சாரம், மதுவிலக்கு மற்றும்**
**ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**

## இணைப்பு – 1

**(பத்தி 3.1–ஐ பார்க்க)**

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் மற்றும் விதிகள்

| | |
|---|---|
| 1 | தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937 (தமிழ்நாடு சட்டம் 10 / 1937). |
| 2 | தடுப்புக் காவல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14 / 1982) |
| 3 | தமிழ்நாடு நீரா மற்றும் பதநீர் விதிகள், 1939 |
| 4 | தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகள், 1958. |
| 5 | தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்சு பாலிஷ்) விதிகள், 1959. |
| 6 | தமிழ்நாடு தீர்வு செய்ய வேண்டிய பொருள் (தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்பட்டவை) விதிகள், 1979. |
| 7 | தமிழ்நாடு வடிப்பாலை விதிகள், 1981. |
| 8 | தமிழ்நாடு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் (உற்பத்தி) விதிகள், 1981. |
| 9 | தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள், 1981. |
| 10 | தமிழ்நாடு மதுபானம் (இடமாற்றம் ) விதிகள், 1982. |
| 11 | தமிழ்நாடு மதுபானம் (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகள், 1983. |
| 12 | தமிழ்நாடு பீர் வடிப்பாலை விதிகள், 1983. |

| | |
|---|---|
| 13 | தமிழ்நாடு மதுவிலக்கு மேல்முறையீடு மற்றும் சீராய்வு விதிகள், 1983. |
| 14 | தமிழ்நாடு குளோரல் ஹைட்ரேட் விதிகள், 1984. |
| 15 | தமிழ்நாடு மாஸ் ஒயின் விதிகள், 1984. |
| 16 | தமிழ்நாடு சாராவி தயாரித்தல் (கட்டுப்பாடு ) விதிகள், 1984. |
| 17 | தமிழ்நாடு சாராவி தயாரித்தல் (மாநிலத்திற்குள் தொழிலும் மற்றும் வணிகம்) கட்டுப்பாடு விதிகள், 1985. |
| 18 | தமிழ்நாடு போதை மருந்துகள் விதிகள், 1985. |
| 19 | தமிழ்நாடு மதுபானம் (சொந்த பயன்பாட்டிற்கான உடைமை) விதிகள், 1996. |
| 20 | தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள், 2000. |
| 21 | தமிழ்நாடு மதுபானம் சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகள், 2003. |
| 22 | தமிழ்நாடு ஒயின் (உற்பத்தி ) விதிகள், 2006. |
| **இத்துறையால் செயல்படுத்தப்படும் மத்திய சட்டங்கள் மற்றும் விதிகள்** | |
| 1 | மருந்து மற்றும் ஒப்பனைப்பொருட்கள் (ஆயத்தீர்வை) சட்டம், 1955. |
| 2 | மருந்து மற்றும் ஒப்பனைப்பொருட்கள் (ஆயத்தீர்வை) விதிகள், 1956. |
| 3 | போதை மருந்துகள்– மன மயக்கப் பொருட்கள் சட்டம், 1985. |
| 4 | போதை மருந்துகள்– மன மயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம், 1988 |

# இணைப்பு –2
## (பத்தி 3.5–ஐ பார்க்க)

## தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கொள்ளளவு மற்றும் உற்பத்தி பற்றிய விவரங்கள்

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட கொள்ளவு (மெட்ரிக் டன்) | உற்பத்தி விபரம் (அக்டோபர் 2015 – செப்டம்பர் 2016) (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **கூட்டுறவுத்துறை திருவாளர்கள்** | | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருப்பூர் மாவட்டம். | 11000 | 13701 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம் மாவட்டம். | 12000 | 9565 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருவள்ளூர் மாவட்டம். | 14000 | 10244 |
| 4 | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், தருமபுரி மாவட்டம். | 15000 | 7747 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், தருமபுரி மாவட்டம். | 12000 | 8562 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், மதுரை மாவட்டம் | 17000 | 11139 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம் | 7000 | 4288 |
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம் | 10000 | 4882 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம். | 21000 | 3700 |
| 10 | செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், விழுப்புரம் மாவட்டம். | 16000 | 2120 |
| 11 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், அலகு –1, விழுப்புரம் மாவட்டம். | 15000 | 18712 |
| 12 | எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், கடலூர் மாவட்டம். | 12000 | 9489 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், அலகு –2, விழுப்புரம் மாவட்டம். | 12000 | 23196 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாமக்கல் மாவட்டம். | 19000 | 14663 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 15 | என்.பி.கே. ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாகப்பட்டினம் மாவட்டம். | 18000 | 3365 |
| 16 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருவண்ணாமலை மாவட்டம். | 12000 | 10990 |
| | **மொத்தம்** | **223000** | **156363** |
| | **பொதுத்துறை திருவாளர்கள்** | | |
| 17 | மதுரா சுகர்ஸ், மதுரை மாவட்டம். (இயங்கவில்லை) | 6000 | 0 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை லிமிடெட், தஞ்சாவூர் மாவட்டம். | 14000 | 12516 |
| 19 | பெரம்பலூர் சர்க்கரை ஆலை லிமிடெட், பெரம்பலூர் மாவட்டம். | 12000 | 13278 |
| | **மொத்தம்** | **32000** | **25794** |
| | **தனியார் துறை திருவாளர்கள்** | | |
| 20 | பத்மாதேவி சுகர்ஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 9000 | 0 |
| 21 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு – 1, தேனி மாவட்டம். | 12000 | 19716 |
| 22 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு – 1, திருநெல்வேலி மாவட்டம். | 12600 | 9820 |
| 23 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், அலகு – 1, ஈரோடு மாவட்டம். | 19300 | 49506 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ், அலகு – 2, ஈரோடு மாவட்டம். | 18000 | 22257 |
| 25 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், அலகு –2, சிவகங்கை மாவட்டம். | 12000 | 17784 |
| 26 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ், தஞ்சாவூர் மாவட்டம். | 24000 | 9011 |
| 27 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா ) லிமிடெட், கடலூர் மாவட்டம். | 18600 | 59077 |
| 28 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு –2, விழுப்புரம் மாவட்டம். | 13000 | 39517 |
| 29 | பொன்னி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், நாமக்கல் மாவட்டம். | 12600 | 24604 |
| 30 | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், அலகு – 1, கடலூர் மாவட்டம். | 24000 | 18598 |
| 31 | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், அலகு – 2, தஞ்சாவூர் மாவட்டம். | 12000 | 10895 |
| 32 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா லிமிடெட், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 11000 | 4179 |
| 33 | இ.ஐ.டி. பாரி ( இந்தியா ) லிமிடெட், கரூர் மாவட்டம். | 21000 | 36194 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 12100 | 13611 |
| 35 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு – 2, திருவண்ணாமலை மாவட்டம். | 15000 | 21354 |
| 36 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ், கடலூர் மாவட்டம். | 38000 | 23028 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 37 | இஜடி.பாரி (இந்தியா) லிமிடெட்,<br>புதுக்கோட்டை மாவட்டம். | 10000 | 15766 |
| 38 | அருணாசலம் சுகர்ஸ்,<br>திருவண்ணாமலை மாவட்டம்.<br>(இயங்கவில்லை) | 0 | 0 |
| 39 | கோத்தாரி சுகர்ஸ் &<br>கெமிக்கல்ஸ் லிமிடெட்,<br>அரியலூர் மாவட்டம். | 16000 | 14105 |
| 40 | சக்தி சுகர்ஸ் லிமிடெட்,<br>அலகு – 3, ஈரோடு மாவட்டம். | 10000 | 25040 |
| 41 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ்<br>லிமிடெட், அலகு – 3,<br>விழுப்புரம் மாவட்டம். | 27000 | 26092 |
| 42 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ்<br>லிமிடெட், அலகு–3,<br>விழுப்புரம் மாவட்டம். | 26000 | 27498 |
| 43 | தனலக்ஷ்மி ஸ்ரீனிவாசன் சுகர்ஸ்<br>பிரைவேட் லிமிடெட்,<br>பெரம்பலூர் மாவட்டம். | 18000 | 33894 |
| 44 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ்<br>லிமிடெட்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | 12000 | 31975 |
| 45 | எம்பீ சுகர்ஸ்,<br>திருநெல்வேலி மாவட்டம்.<br>(இயங்கவில்லை) | 20000 | 0 |
| 46 | மெட்ராஸ் சுகர்ஸ் லிமிடெட்,<br>விழுப்புரம் மாவட்டம். | 12000 | 35755 |
| | **மொத்தம்** | **435200** | **589276** |
| | **ஒட்டு மொத்தம்** | **690200** | **771433** |

# இணைப்பு – 3

## (பத்தி 3.8–ஐ பார்க்க)

## தமிழ்நாட்டில் உள்ள வடிப்பாலைகளின் விவரங்கள்

| வ. எண். | உரிமதாரரின் பெயர் | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் உற்பத்தி திறன் நாளொன்றுக்கு (கிலோ லிட்டர்) | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் ஆண்டு உற்பத்தி திறன் (கிலோ லிட்டர்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | **கூட்டுறவுத் துறை திருவாளர்கள்** | | |
| 1 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாமக்கல். | 55 | 16500 |
| 2 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருப்பூர். | 55 | 16500 |
| | **தனியார் துறை திருவாளர்கள்** | | |
| 3 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட், ஈரோடு. | 67.5 | 20250 |
| 4 | சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஈரோடு. | 120 | 36000 |

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| 5 | ஈ.ஐ.டி.பாரி ( இந்தியா ) லிமிடெட், கடலூர். | 75 | 26300 |
| 6 | திருச்சி டிஸ்டிலரீஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி. | 60 | 18000 |
| 7 | சதன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், விழுப்புரம். | 20 | 6000 |
| 8 | மோகன் புரூவரீஸ் & டிஸ்டிலரீஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 62 | 18600 |
| 9 | கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், கடலூர். | 80 | 26400 |
| 10 | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், தஞ்சாவூர். | 60 | 19800 |
| 11 | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி. | 60 | 20700 |
| 12 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், தேனி. | 45 | 13500 |
| 13 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருநெல்வேலி. | 60 | 18000 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 14 | பவானி டிஸ்டிலரீஸ் & கெமிக்கல்ஸ், வேலூர். | 44 | 13200 |
| 15 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட், கடலூர். | 70 | 21000 |
| 16 | ஈ.ஐ.டி.பாரி ( இந்தியா ) லிமிடெட், சிவகங்கை. | 74 | 22200 |
| 17 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், விழுப்புரம். | 80 | 24000 |
| 18 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், விழுப்புரம். | 100 | 30000 |
| | **மொத்தம்** | **1187.5** | **366950** |

# இணைப்பு –4

**(பத்தி 3.11–ஐ பார்க்க)**

## எத்தனால் தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள வடிப்பாலைகளின் விவரங்கள்

| வ. எண். | வடிப்பாலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட எத்தனால் உற்பத்தி அளவு நாளொன்றுக்கு (கிலோ லிட்டர்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **கூட்டுறவுத் துறை திருவாளர்கள்** | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை. | 30 |
| 2 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை. | 30 |
| | **தனியார் துறை திருவாளர்கள்** | |
| 3 | சக்தி சுகர்ஸ் லிமிடெட். | 50 |
| 4 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 45 |
| 5 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 30 |
| 6 | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 30 |
| 7 | ஈ.ஐ.டி. பாரி ( இந்தியா) லிமிடெட். | 45 |
| 8 | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட். | 60 |
| | **மொத்தம்** | **320** |

# இணைப்பு – 5
## (பத்தி 3.13–ஐ பார்க்க)

**இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்**

| வ . எண். | உரிமதாரரின் பெயர் | சிறப்புரிமை வழங்கப்பட்ட நாள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் திருவாளர்கள்** | |
| 1 | மோகன் புரூவரீஸ் & டிஸ்டில்லரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 03.03.1982 |
| 2 | சதர்ன் அக்ரிபுரேன் இண்ட்ஸ்டிரீஸ் (பி) லிமிடெட், விழுப்புரம். | 26.07.1982 |
| 3 | சிவா டிஸ்டில்லரீஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 26.08.1982 |
| 4 | எம்பீ டிஸ்டில்லரீஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 06.06.1984 |
| 5 | என்ரிகா என்டர்பிரைஸஸ் (பி) லிமிடெட், திருவள்ளூர். | 28.07.1984 |
| 6 | மிடாஸ் கோல்டன் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 31.05.2002 |
| 7 | எலைட் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 28.11.2007 |
| 8 | எஸ்.என்.ஜெ. டிஸ்டில்லர்ஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 30.07.2008 |
| 9 | கால்ஸ் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், புதுக்கோட்டை. | 10.01.2008 |
| 10 | கோல்டன் வாட்ஸ் (பி) லிமிடெட், திருவாரூர். | 20.10.2010 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 11 | இம்பீரியல் ஸ்பிரிட்ஸ் & ஒயின் (பி) லிமிடெட், கோயம்புத்தூர். | 24.01.2011 |
| | **பீர் உற்பத்தி நிறுவனங்கள் திருவாளர்கள்** | **இசைவுக் கடிதம் வழங்கப்பட்ட நாள்** |
| 1 | மோகன் புரூவரீஸ் & டிஸ்டில்லரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 24.08.1983 |
| 2 | எம்பீ புரூவரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 20.03.1987 |
| 3 | யுனைடெட் புரூவரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 29.07.1994 |
| 4 | எஸ்.என்.ஜே. புரூவரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 08.03.2010 |
| 5 | கால்ஸ் புரூவரீஸ் (பி) லிமிடெட், புதுக்கோட்டை. | 30.09.2010 |
| 6 | அப்போல்லோ டிஸ்டில்லரீஸ் & புரூவரீஸ் (பி) லிமிடெட், திருவள்ளூர். | 01.07.2010 |
| 7 | ஏ. எம்.புரூவரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 03.09.2010 |
| | **ஒயின் உற்பத்தி நிறுவனம் திருவாளர்கள்** | **இசைவுக் கடிதம் வழங்கப்பட்ட நாள்** |
| 1 | கம்பம் வேலி ஒயினரி (பி) லிமிடெட், தேனி. | 25.10.2007 |